COMMISSIONER OF MUNICIPAL ADMINISTRATION
11 DEC 2017
CHEPAUK, CHENNAI-5.

## சுருக்கம்

பாதாள சாக்கடைத் திட்டம் – திண்டுக்கல் மாநகராட்சி – கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் உள்ள காலி இடம் – சமூக காடுகள் வளர்த்தல், பாதாள சாக்கடை கழிவுநீரை சுத்திகரித்து வழங்குதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 12 ஏக்கர் தனியார் இடத்தினை மாநகராட்சி தானமாக பெறுதல் –அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2)துறை

**அரசாணை (நிலை) எண்.128** **நாள். 07.12.2017**

ஹேவிளம்பி, கார்த்திகை –21

திருவள்ளுவராண்டு, 2048

படிக்கப்பட்டது.

1. அரசாணை (ப) எண்.64, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.27.06.2012.
2. அரசாணை (ப) எண்.68, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.06.2014.
3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண்.25133/2016/எம்.2, நாள்.23.11.2016.

*********

**ஆணை**

மேலே 1–வது மற்றும் 2–வதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், திண்டுக்கல் மாநகராட்சிக்கு, திண்டுக்கல் டால்கோ டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தால் பாதாள சாக்கடைத் திட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக சுமார் 36.075 + 4.12 (40.195) ஏக்கர் அளவிலான நிலம் தானமாக பெறப்பட்டதற்கும், மேற்படி நிறுவனத்தினர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு அதில் 1/3 பங்கு இலவசமாக வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2. நகராட்சி நிர்வாக ஆணையர், மேலே 3–வதாக படிக்கப்பட்ட கடிதத்தில், திண்டுக்கல் மாநகராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் உள்ள காலி இடத்தில் சமூக காடுகள் வளர்க்கவும், பாதாள சாக்கடை கழிவு நீரினை சுத்திகரித்து 1/3 கூடுதலாக M/s.டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கவும் மற்றும் மாநகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிக்காக மேற்படி நிறுவனத்தின் மூலம் தானமாக வழங்கப்படும் 12 ஏக்கர் இடத்தினை தானமாக பெற்றுக் கொள்வதற்கும் அரசின் அனுமதி கோரியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையர், மேலும் தமது கடிதத்தில் திண்டுக்கல் மாநகராட்சியின் மக்கள் தொகை 2,07,324–ஆக உள்ளது என்றும், மேற்படி திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்திட தற்போதுள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் 20

ஏக்கருக்கும் குறையாத பரப்பளவிலான நிலம் தேவைப்படுவதால், மேற்படி டால்கோ நிறுவனத்தால் இரண்டாவது முறையாக வழங்கப்பட்ட சுமார் 11.64 ஏக்கர் இடத்தினை ஒட்டி உள்ள இடம் திடக்கழிவுகளுக்கான டம்பிங் யார்டு (Dumping Yard) உபயோகத்திற்கு தகுதியான இடமாக உள்ளதால், அதன் அருகே உள்ள சுமார் 12 ஏக்கர் இடத்தினை தானமாக வழங்கிட மாநகராட்சி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், மேற்படி நிறுவனத்தினர் தாங்கள் தோராயமாக வழங்கிய 40 ஏக்கர் இடத்தில் திண்டுக்கல் மாநகராட்சியின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் நிலைய கட்டடங்கள் போக மீதமுள்ள காலியிடங்களில் சமூக காடுகள் வளர்க்க அனுமதியும், அதாவது அதில் மரக்கன்றுகள் வைத்து அபிவிருத்தி செய்யலாம் என்றும், அதிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தில் நிர்வாகச் செலவுகள் நீங்கலாக மீதத்தினை மாநகராட்சிக்கு வழங்குவதாகவும் டால்கோ திண்டுக்கல் தோல் வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது என்றும், மேலும் படிக்கப்பட்ட அரசாணை 1–ன் மூலம் ஏற்கனவே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரில் மொத்த கொள்ளளவில் 1/3 பங்கு நீரினை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (CETP)–யின் உபயோகத்திற்கு இலவசமாக அனுமதித்திருப்பது போல் தற்பொழுது சமூக காடுகள் அபிவிருத்தி திட்டத்திற்கும், அவர்களுடைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய டேனரிகள் உபயோகத்திற்கும் கூடுதலாக 1/3 பங்கு தண்ணீர் சேர்த்து 2/3 பங்கு தண்ணீரினை இலவசமாக வழங்கிட அனுமதி கோருவது என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் 12 ஏக்கர் பரப்பளவிலான இடத்தினை தானமாக வழங்க அந்நிறுவனத்தினர் முன்வந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் தமது கடிதத்தில் மாநகராட்சியின் எதிர்கால வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் ஏற்ப திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை செய்திட கூடுதலான நிலம் தேவைப்படுவதால், மேற்படி நிறுவனத்தாரின் கோரிக்கையின் அடிப்படையில் கீழ்காணும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு திடக்கழிவு மேலாண்மை செய்ய தேவையான இடங்களை தவிர எஞ்சியுள்ள இடத்தில் நகர்ப்புற சமூக காடுகள் வளர்க்கவும், அதற்காக பாதாள சாக்கடைத் திட்டத்தின் மூலம் பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட 1/3 பங்கு கூடுதலான நீரினை வழங்க பரிசீலினை செய்யலாம் என்று திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு :-

i. சுத்திகரிப்பு செய்யப்பட்ட தண்ணீரில் இம்மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் மாநகராட்சியின் இதர பயன்பாட்டிற்கும் பயன்படுத்தியது போக மீதமாகும் தண்ணீரினை மட்டுமே கூடுதலாக 1/3 பங்கு தண்ணிரினை M/s.டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கலாம்.

ii. வருங்காலங்களில் மேற்படி தண்ணீரினை தொழிற்சாலைகள் வணிக நிறுவனங்கள் மற்றும் இதர தனியார் நிறுவனங்கள் கட்டண அடிப்படையில் பெற்றுக் கொள்ள முன்வரும் பட்சத்தில் மேற்கண்ட நிறுவனத்திற்கு அரசாணை (நிலை) எண்.64, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.06.2012–ன்படி 1/3 தண்ணீரை மட்டுமே இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும், தற்பொழுது கூடுதலாக வழங்க உத்தேசித்துள்ள 1/3 பங்கு நீரினை தேவைப்படும் பட்சத்தில் அரசாணை (நிலை) எண். 68, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,

iii. நாள் 13.06.2014–ன்படி கட்டண அடிப்படையில்தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் வழங்கலாம்.

iv. திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள 36.5 ஏக்கர் பரப்பளவில் உள்ள பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் அமைந்துள்ள இடங்கள் நீங்கலாக மற்றும் எதிர்கால அபிவிருத்திப் பணிகளுக்காகத் தேவைப்படும் இடங்களை தவிர்த்து மீதமுள்ள காலியாக உள்ள இடத்தில் சமூக காடுகள் வளர்ப்பு திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் வைத்து அபிவிருத்தி செய்யவும், அதிலிருந்து கிடைக்க பெறும் வருவாயினை நிர்வாகச் செலவிற்கு மட்டும் பயன்படுத்தியது போக மீதமுள்ள தொகையினை மாநகராட்சிக்குச் செலுத்திட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மாநகராட்சி பாதாள சாக்கடை திட்ட சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து மொத்த கொள்ளளவில் 1/3–ல் பங்கு நீர் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய உபயோகத்திற்கு கட்டணமின்றி வழங்கிட அனுமதித்துள்ளதைப் போன்று சமூக காடு வளர்க்கும் திட்டத்திற்கும் கூடுதலாக 1/3 பங்கு நீர் கட்டணமின்றி வழங்க அனுமதிக்கலாம்.

v. M/s.டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்தினர் மூன்றில் இரண்டு பங்கு சுத்திகரிப்பு செய்யப்படும் தண்ணீரான 4.55 MLD + 4.55 MLD ஆக மொத்தம் 9.10 MLD சுத்திகரிப்பு செய்யப்படும் நீரினை திண்டுக்கல் மாநகராட்சி இரண்டாவது கட்ட பாதாள சாக்கடைத் திட்ட செயல்பாடுகள் முடிவடைந்து செயல்படும்போதுதான் பெறப்படும். அப்போது கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்யும்போது பெறப்படும் நீரினை பொறுத்தே அதிகபட்சமாக 13 MLD சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் உற்பத்தி பெற வாய்ப்புள்ளது. எனவே M/s.டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்தினர் இனிவருங்காலங்களில் பெறப்படும் கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்த நீரினைப் பெற தற்போது கோரிக்கை வைத்துள்ளதால், அப்போதைய நடைமுறையில் உள்ள அரசாணையின்படி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை இலவசமாக / கட்டண அடிப்படையிலோ வழங்க திண்டுக்கல் மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்கலாம்.

5. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் இக்கழிவுநீரை மீண்டும் சுத்திகரிப்பு செய்து அதில் 1/3 பங்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை (Carbon Credits) பெற வாய்ப்புள்ளது என்றும், இத்திட்டத்தில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் வெளியேற்றப்படும் நீர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் அளவுகோல்களின்படி உள்ளது எனவும், மேலும், உற்பத்தியாகும் 13.65 MLD கழிவு நீரில் M/s.டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்தினர் கூடுதலாக கோரும் 1/3 பங்கு நீரான 4.55 MLD கழிவுநீரினை 1/3 பங்கு நீர் (STEW) உபயோகத்திற்கு கணக்கீடும் பட்சத்தில் ரூ.51,415/– (45,50,000/1000x11.30) ஆகும். ஆனால் மொத்த கழிவுநீர் சுத்திகரிப்பு

நிலையம் அமையவுள்ள நிலம் 36.075+4.12(40.195) ஏக்கர் தானமாக திண்டுக்கல் மாநகராட்சிக்கு வழங்கியதின் மதிப்பு தோராயமாக ரூ.80.00 இலட்சம் ஆகும். சமூக காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான மரங்கள் வளர்ப்பதன் மூலம் ஈட்டப்படும் வருவாய் அனைத்தும் இத்திட்டத்தின் இறுதி பயன் சமூக நலமே தவிர லாப நோக்கம் அல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார். (Social benefits would be end result) மேலும், அனைத்து வகையான பராமரிப்புகளும் M/s.டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

6. மேற்கண்ட சூழ்நிலையில், (i) கூடுதலாக 1/3 பங்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை M/s.டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்தற்கு இலவசமாக வழங்கவும் (ii) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் அருகாமையில் உள்ள காலியிடங்களில் டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனம் சமூக காடுகள் வளர்க்கவும் மற்றும் (iii) மேற்படி நிறுவனத்திடமிருந்து திடக்கழிவு மேலாண்மைப் பணிக்காக 12 ஏக்கர் பரப்பளவிலான இடத்தினை மாநகராட்சி தானமாகப் பெற்றுக் கொள்வதற்கும் அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

7. மேலே பத்தி 6–ல் உள்ள நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப்பின், (i) கூடுதலாக 1/3 பங்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை M/s.டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்தற்கு இலவசமாக வழங்கவும் (ii) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் அருகாமையில் உள்ள காலியிடங்களில் டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனமானது சமூக காடுகள் வளர்க்கவும் மற்றும் (iii) மேற்படி நிறுவனத்திடமிருந்து திடக்கழிவு மேலாண்மைப் பணிக்காக 12 ஏக்கர் பரப்பளவிலான இடத்தினை மாநகராட்சி தானமாகப் பெற்றுக் கொள்வதற்கும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

i. தற்பொழுது கூடுதலாக வழங்க உத்தேசித்துள்ள 1/3 பங்கு நீரினை தேவைப்படும் பட்சத்தில் அரசாணை (நிலை) எண்.68, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13.06.2014–ன்படி கட்டண அடிப்படையில்தான் பெற்றுக் கொள்ள வேண்டும்

ii. திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள 36.5 ஏக்கர் பரப்பளவில் உள்ள பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் அமைந்துள்ள இடங்கள் நீங்கலாக மற்றும் எதிர்கால அபிவிருத்திப் பணிகளுக்காகத் தேவைப்படும் இடங்களை தவிர்த்து மீதமுள்ள காலியாக உள்ள இடத்தில் சமூக காடுகள் வளர்ப்பு திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் வைத்து அபிவிருத்தி செய்யும் அனைத்து வகையான பராமரிப்பு பணிகளை அவ்விடங்களை பயன்படுத்தி அந்நிறுவனம் மேற்கொள்ள வேண்டும். மேலும், அதிலிருந்து கிடைக்கப்பெறும் வருவாயினை திண்டுக்கல் மாநகராட்சிக்கு

செலுத்திட வேண்டும். அந்த இடம் திண்டுக்கல் மாநகராட்சியின் சொந்த கட்டுப்பாட்டில் தொடர்ந்து இருக்கும்.

8. இவ்வரசாணை நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல்) துறையின் அ.சா.எண்.105/ADS/PK/17 நாள் 07.12.2017 ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.

ஆணையாளர், திண்டுக்கல் மாநகராட்சி, திண்டுக்கல்

திருவாளர். திண்டுக்கல் டேனர்ஸ் இன்ரோ கன்ட்ரோல்
சிஸ்டம் (பி) லிமிடெட்
எண்.227/86–பி, மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல் – 624 002

**நகல்**

நகராட்சி நிர்வாகம் , ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மைத்
தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை – 600 009.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை,
சென்னை – 600 009.

நிதித்துறை, தலைமைச்செயலகம், சென்னை–09.

சுற்றுசூழல் மற்றும் வனத்துறை ,தலைமைச்செயலகம், சென்னை–09.

பொதுப்பணித்துறை ,தலைமைச்செயலகம், சென்னை–09.

உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியம், சென்னை–32.

இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சு. அருண்செல்வன் 7/12/17
பிரிவு அலுவலர்